**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8097140

1. District : கிருஷ்ணகிரி / மாவட்டம் — PS: V&AC / காவல்நிலையம் — Year: 2019 / ஆண்டு — FIR No.: 4/AC/2019 / மு.த.அ. எண் — Date: / நாள் 02.03.19

2. (i) Act சட்டம்: 7 and 12 of PC Act 1988 — Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: as amended by PC (Amendment) — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Act 2018 and 41 CrPC r/w 102 CrPC. — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : / குற்ற நிகழ்வு நாள் — Date from : / நாள் முதல் — Date to : / நாள் வரை 01.03.2019 23.00 மணிக்கு மேலாக
   Time Period : / நேர அளவு — Time from : / நேரம் முதல் — Time to : / நேரம் வரை
   (b) Information Received at PS. Date : / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — Time / நேரம் : 02.03.19 / 06.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time / நேரம் : 02.03.19 / 06:00 மணி

4. Type of Information : Written/ Oral : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — தகவல் மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 50 கி.மீ வடமேற்கு
   Beat Number : / முறைக் காவல் எண் — (b) Address : / முகவரி பதிவு துறை, சார்பதிவாளர் அலுவலகம், ஓசூர்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P S / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District / மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G.V. கிருஷ்ணராஜன் — (b) Father's/ Husband's Name : / தந்தை / கணவர் பெயர் வேட்ராயன்
   (c) Date / Year of Birth : / நாள் / பிறந்த ஆண்டு 47 yrs — (d) Nationality / நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : / வழங்கப்பட்ட நாள் — Place of Issue : / வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : / தொழில் காவல் துணை கண்காணிப்பாளர் — (g) Address : / முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திருமதி. சாய்சுதா (53) W/o கலைவாணன், சார்பதிவாளர், ஓசூர்
   2) திரு.B. [illegible] (22) S/o பாபு, லக்ஷ்மணன் நாயுடு வீதி, கோட்டை, தருமபுரி.
   3) திரு. M. [illegible] (34) S/o மல்லப்பா, சானமாவு, [illegible] கிராமம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant / குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் [illegible] (PO) [illegible]

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனி தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

2.3.19.  2/3/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
02.03.2019 / 0900hrs

Name: பெயர் G.V. கிருஷ்ணராஜன்
Rank: நிலை காவல் [illegible]

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 4/AC/2019 u/s 7 and 12 Of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amended) Act 2018 and 41 r/w 102 Cr.P.C வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:

கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் நேற்று 01.03.2019 தேதி இரவு ஓசூரில் முகாமில் இருந்த போது, ஓசூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளர் ஆக பணிபுரியும் திருமதி வ. சாய் கீதா அவர்கள் அலுவலக நேரத்திற்கு பிறகு பத்திர பதிவு தாரர்கள் இடமிருந்தும், பத்திரம் எழுதுபவர்களிடம் இருந்தும் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாகவும் பத்திரங்கள் பதிவு செய்து கொடுத்ததற்காக பெருமளவு பணம் கையூட்டாக பெற்று கொண்டிருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் அரசு சாட்சிகள் திரு பெரியண்ணன், துணை வட்டாட்சியர் மற்றும் தலைமை எழுத்தர், ஜி பிரிவு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கிருஷ்ணகிரி மற்றும் திரு எஸ் சகாதேவன், முதுநிலை வருவாய் ஆய்வாளர், எச் பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கிருஷ்ணகிரி ஆகியோருடனும் மற்றும் காவலர்கள் குழுவினருடனும் நேற்று 01.03.2019 தேதி இரவு 23.00 மணிக்கு ஓசூர் நகரிலுள்ள அலுவலகத்திற்கு சென்றடைந்தோம். அங்கு அந்த அலுவலகத்தின் வராண்டாவில் இருக்கையில் அமர்ந்து கொண்டு இருக்க சார் பதிவாளர் திருமதி வ.சாய் கீதா அவர்களிடம் நான் என்னையும் என்னுடன் வந்த குழுவினர் களையும் அடையாளம் சொல்லி அறிமுகம் செய்து கொண்டு திடீர் தணிக்கைக்காக வந்த விவரத்தை தெரிவித்தேன். ஓசூர் நகர காவல் நிலையத்தில் பணிபுரியும் பெண் காவலர் செல்வி ஜி புஷ்பா அவர்களின் உதவியுடன் சார் பதிவாளர் திருமதி வ. சாய் கீதா அவர்களை அவருடைய அறைக்கு உள்ளே அழைத்துச் சென்று அங்கு முத்திரையிடும் இருக்கையில் அவரை அமரச் செய்தேன். அந்த அறையில் சார் பதிவாளரின் கார் ஓட்டுனராக அங்கு வந்து இருந்த திரு பி. அக்மல் என்பவர் இருந்தார். மேற்கு பக்க அறையில் அலுவலக உதவியாளர் திரு ஜே. ராஜன் என்பவரும் அந்த அலுவலகத்தில் சார் பதிவாளரின்

உத்தரவுப்படி கணினி இயக்குனராக பணிபுரிந்து வரும் தனி நபரான திரு எம். கணேசன் என்பவரும் இருந்தார்கள். சந்தேகத்தின் அடிப்படையில் சார் பதிவாளர் திருமதி வ.சாய் கீதா அவர்களின் பச்சை கலர் கைப்பை பெண் காவலர் மூலம் சோதனையிடப்பட்டது. அந்தப் பையினுள் முதல் அறையில் பணம் மடிப்புடன் வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பணம் குறித்து சார்பதிவாளரிடம் விளக்கம் கேட்டபோது, அதில் எவ்வளவு பணம் உள்ளது என்றும் எவ்வாறு அது பெறப்பட்டது என்பது குறித்தும் அவரால் திருப்திகரமான விளக்கம் தர முடியாமல் முன்னுக்குப்பின் முரணாக பதிலளித்தார். அரசு சாட்சிகள் உதவியுடன் அந்த பணத்தை எண்ணிப் பார்க்கையில் அதில் மொத்தம் ரூ.18,690/- இருந்தது. அந்த பணம் சார் பதிவாளர் அவர்கள் தனது அலுவல் பணியாற்றுகையில் ஆவண பதிவு தாரர்கள் இடமிருந்தும் இடைத்தரகர்களிடம் இருந்தும், நேர்மையற்ற முறையில் பெற்றிருக்கக் கூடும் என்பதற்கான போதுமான முகாந்திரம் இருந்ததால் மேல் விசாரணைக்காக என்னால் இந்த நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்டது. பிறகு நான் அருகிலிருந்த திரு.அக்மல் என்பவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் தனது இடது மற்றும் வலது பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து பணத்தை கற்றையாக ஆஜர் செய்தார். மேலும் அவருடைய பேண்டின் பின் பாக்கெட்டில் இருந்து கருப்பு கலர் மணிபர்சை எடுத்து அதனுள் வைக்கப்பட்டிருந்த பணத்தை கற்றையாக ஆஜர் படுத்தினார். அந்த ரூபாய் நோட்டுக்கள் குறித்து நான் அவரிடம் விளக்கம் கேட்டபோது, அதில் எவ்வளவு பணம் உள்ளது என்றும் எவ்வாறு அது பெறப்பட்டது என்பது குறித்தும் அவரால் திருப்திகரமான விளக்கம் தர முடியாமல் முன்னுக்குப்பின் முரணாக பதிலளித்தார். அரசு சாட்சிகள் உதவியுடன் அந்த பணத்தை எண்ணிப் பார்க்கையில், அவருடைய மணி பர்ஸிலிருந்து பணத்தில் மொத்தம் ரூ.47190/- இருந்தது. அவருடைய பேண்ட் பாக்கெட்டுகளில் வைக்கப்பட்டிருந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் மொத்தம் ரூ.88,300/- இருந்தது. மேலும் அவரது பாக்கெட்டில் வைத்திருந்த பணத்துடன் ஒரு சிறிய வெள்ளைத் தாளில் 01.03. என கருப்பு மையினால் தேதி இடப்பட்டு அதற்குக் கீழே

1. 3499-P-500
2. 3556-S-500 Chetty
3. 3559-G-500
4. 3560-S-500
5. 3568-S-500
6. 3590-S-500

3000

என கருப்பு மையினால் பதிவுகள் செய்யப்பட்ட வெள்ளைத்தாள் ஒன்றும் இருந்தது. இது குறித்தும் திரு அக்மல் கொடுத்த விளக்கம் முன்னுக்குப் பின் முரணாகவும் இருந்தது. அதன் பின்பு அவர் வைத்திருந்த தொகைகள் எல்லாம் தான் நகையை அடமானம் வைத்து கடன் பெற்று வைத்திருந்த தொகை என்று தெரிவித்தார். ஆனால் அதுகுறித்து அவரால் எந்த ஆவணமும் ஆஜர் செய்ய முடியவில்லை. எனவே அவர் சார் பதிவாளரை தூண்டும் வகையில் இடைத்தரகர்களிடம் இருந்தும், ஆவண பதிவு தாரர்கள் இடமிருந்தும் சார் பதிவாளருக்கு கொடுப்பதற்காக கேட்டு வாங்கி வைத்திருக்கக்கூடும் என்று சந்தேகிக்க போதுமான முகாந்திரம் இருந்ததால் அவர் வைத்திருந்த மொத்த பணம் ரூ.1,35,490/- மற்றும் அந்த சிறிய வெள்ளை சீட்டு ஆகியவற்றை இந்த செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு சாட்சிகள் முன்னிலையில் சார் பதிவாளர் அலுவலக அறைகள் ஒவ்வொன்றாக சோதனையிடப்பட்டது. மேற்கு பக்க அறையின் வடகிழக்கு மூலையில் கணினி மேஜைக்கு அடியில் பணம் மடிப்புடன் வைக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. அந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்க்கையில் மொத்தம் ரூ.21,600/- இருந்தது. அந்த தொகை குறித்து சார் பதிவாளர் திருமதி வ. சாய் கீதா அலுவலக உதவியாளர் திரு ஜே ராஜன், திரு அக்மல் மற்றும் திரு கணேசன் ஆகியோரிடம் நான் கேட்டபோது, திரு கணேசன் என்பவர் அந்தப் பணம் தன்னுடையது என்றும் தான் அந்த பணத் அங்கு வைத்திருந்ததாகவும் தெரிவித்து அந்த பணத்திற்கு உரிமை கோரினார். ஆனால் அந்தப் பணம் அங்கு வைக்கப்பட்டிருந்த விதம் சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வண்ணம் இருந்தாலும் ஏதேனும் அவர் குற்றம் செய்ததின் விளைவாக அந்த பணத்தை பெற்றிருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததாலும் அந்த பணம்

என்னால் இந்த செயல்முறை நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அறையின் கிழக்குச் சுவற்றில் மாட்டி வைக்கப்பட்டுள்ள தீயணைப்பு கருவியின் பின் பக்கத்தில் பணம் மடிப்புடன் வைக்கப்பட்டு இருந்தது. அந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் மொத்தம் ரூ.10,590/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுகளில் மத்தியில் என கருப்பு மையினால் எழுதப்பட்ட கீழ்கண்ட குறிப்புகள் அடங்கிய இரண்டு வெள்ளை தாள்கள் இருந்தன.

வெள்ளை தாள்-1

| முதல் பக்கம் | இரண்டாம் பக்கம் |
|---|---|
| SNR | SNR |
| 18/2/ -2 | 18/2/ -2 |
| 19/2/ -3 | 25/2/ -4 |
| 21/2/- - | |
| 22/2/ - 1 | |
| 25/2/ - 3 | |
| 27/2/ - 1 | |
| 28/2/ - 3 | |
| 13 | |

வெள்ளை தாள்-2

| முதல் பக்கம் | இரண்டாம் பக்கம் |
|---|---|
| LR | MS |
| 18 -2 | 25/2 - 3 |
| 19 -1 | 27/2 -- |
| 20 -2 | 28/2- 2 |
| 25- 4 | 1/3 - |
| 27- 5X4 | |

மேற்கண்ட அங்கிருந்த அலுவலர்கள் யாரும் உரிமை கோர முன் வராததாலும், அந்தப் பணம் சந்தேகிக்கத் தக்க வகையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. எனவே மேல் விசாரணைக்காக அந்த பணமும் மேற்சொன்ன இரண்டு வெள்ளை சீட்டுகளும் என்னால் இந்த செயல்முறை நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்டது

பிறகு நான் சார் பதிவாளர் திருமதி வ. சாய் கீதா அவர்களிடம் "அ" பதிவேடு, வருகைப் பதிவேடு, ஆவண எண் குறிப்பு பதிவேடு மற்றும் தனிநபர் தனி உரையில் வைக்கும் பதிவேடு ஆகியவற்றை குறித்து கேட்க, அவருடைய அறையில் கிழக்குப் பக்க அறையிலிருந்து, அலுவலக உதவியாளர் மூலம் மேற்கண்ட ஆவணங்களை ஆஜர் படுத்தினார். அந்த ஆவணங்கள் பார்வையிடப்பட்டது.

1. வருகைப் பதிவேடு. இப்பதிவேடு 01.01.2019 முதல் துவக்கப்பட்டுள்ளது. பதிவேட்டில் பக்கம் 3 இல் இன்றைய தினம் அலுவலகத்திற்கு வருகை தந்த பணியாளர்களின் பதிவு விவரங்கள் உள்ளது. சார் பதிவாளர் திருமதி வ. சாய் கீதா, இளநிலை உதவியாளர் திருமதி சி அமுதா திரு. மா. தங்கம், அலுவலக உதவியாளர்கள் திரு சி ராஜா மற்றும் ஜே.ராஜன் ஆகியோர் வருகை புரிந்தமைக்கு அடையாளமாக அவர்களின் சுருக்கொப்பம் போடப்பட்டுள்ளன. சார் பதிவாளர் திரு உதயசங்கர் மருத்துவ விடுப்பில் இருப்பதாகவும் உதவியாளர்கள் திரு என் நேருஜி தற்செயல் விடுப்பில் இருப்பதாகவும் பதிவுகள் உள்ளன. உதவியாளர் திரு ப. வினோத் என்பவர் இன்று அலுவலுக்கு வரவில்லை. இந்த பதிவேட்டை பார்வையிட்டு அதற்கு அடையாளமாக காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் அரசு சாட்சிகள் ஆகியோர் பக்கம் 3 இல் கையொப்பம் செய்தனர்.

2. "அ" கணக்குப் பதிவேடு பார்வையிடப்பட்டது. இன்றைய தினம் ஆவண எண் 3496 முதல் 3620 வரையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக விவரங்கள் உள்ளது.

3. ஆவண எண் குறிப்பு பதிவேடு பார்வையிடப்பட்டது. இப்பதிவேட்டில் பக்கம் 293 மற்றும் 294 இல் ஆவண எண் 3496 முதல் 3620 வரையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பதிவுகள் உள்ளன.

4. தனிநபர் தனி உரையில் வைக்கும் பதிவேடு பார்வையிடப்பட்டது. இப்பதிவேட்டில் பக்கம் 18 இல் 01.03.2019 தேதியில் திருமதி வ. சாய் கீதா, திரு வினோத், திருமதி. அமுதா, திரு தங்கம், திரு.ராஜா மற்றும் திரு ராஜன் ஆகியோரின் பெயர்கள்

பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. அதில் திருமதி. அமுதா அவர்கள் ரூ.1200/- கொண்டு வந்திருந்ததாகவும், திரு. ஜே ராஜன் அவர்கள் ரூ.350/- கொண்டு வந்திருந்ததாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் மற்ற நபர்களின் பெயருக்கு எதிரி அவர்கள் கொண்டுவந்திருந்த தொகை பற்றி எதுவும் பதிவுகள் செய்யப்படவில்லை. மேற்சொல்லப்பட்ட ஆவணங்களின் சம்பந்தப்பட்ட பக்கங்கள் ஒளி நகல் எடுக்கப்பட்டு அதில் சார் பதிவாளரின் சான்றொப்பம் பெறப்பட்டது. அந்த வருகைப் பதிவேடு ஒளி நகல்கள் (2 தாள்கள் ), "அ" கணக்குப் பதிவேடு ஒளி நகல்கள் (11 தாள்கள் ), தனிநபர் தனி உரையில் வைக்கும் பதிவேடு ஒளி நகல்கள் (2 தாள்கள்), ஆவண எண் குறிப்பு பதிவேடு ஒளி நகல்கள் (2 தாள்கள்) ஆகியவற்றை மேல் விசாரணைக்காக என்னால் இந்த செயல்முறை நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கை கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக மடிக்கணினியில் இன்று 02.03.2019 தேதி அதிகாலை 03.30 மணி வரையில் தயார் செய்யப்பட்டது. பின்பு எனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் இந்த செயல்முறை நடவடிக்கை கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக மடிக்கணினியில் என்னால் பதிவு செய்யப்பட்டு 02.03.2019 தேதி இரவு 03.30 மணிக்கு முடிக்கப்பட்டது. பின்னர் கைப்பற்றப்பட்ட தொகை ரூ.1,86,370/- மற்றும் ஆவணங்களுடன் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 02.03.2019 தேதி அதிகாலை 06.00 மணிக்கு வந்து குற்ற எண் 4/AC/2019 u/s 7 and 12 Of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amended) Act 2018 and 41 r/w 102 Cr.P.C ன் படி சார் பதிவாளர் திருமதி வ. சாய் கீதா, திரு.பி. அக்மல், திரு எம். கணேசன் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையில் அசலையும், செயல்முறை நடவடிக்கையும் சேர்த்து கிருஷ்ணகிரி மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பினேன்.

2.3.19
Dy. Supdt. of Police
Krishnagiri V & AC